விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 32 இதழ் 119
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14 — 06 — 1993

சிங்களக் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதம் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 யுத்தக் கைதிகளும் நேற்று முதல் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள தம்மை விடுவிக்க ஸ்ரீலங்கா அரசு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததைக் கண்டித்தே யுத்தக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

1990ம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பித்த 2ம் ஈழப்போரில் விடுதலைப் புலிகளால் கைது

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகள் தலைவருக்கு உறவினர் கடிதம்

(கொழும்பு)
புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்களப் பொலிசாரை விடுவிக்கும்படி கோரி அரசாங்கத்துக்கு கடிதங்கள் பல எழுதியும் பதிலில்லை. பயனில்லை என்று பொலிசாரின் உறவினர் ஒருவர் பி.பி.ஸி. சிங்கள சேவைக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

வேலையாய்ப்பு இல்லாமல் பொலிஸ் சேவையில் சேர்ந்த இவர்கள் பற்றி, சிங்கள, முஸ்லிம் தலைவர்களுக்கும் தெரிவித்திருந்தேன். சர்வதேச செஞ்சிலுவைச் சங்

4-ம் பக்கம் பார்க்க

இனப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வையே நாட அரசு தீவிரமாக முயல்கிறது?

அவதானிகள் கருத்து

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணவே அரசு முயல்வதாக கூறப்பட்டு வருகின்றபோதும் இராணுவதீர்வு காணவே அரசு தீவிரமாக முயன்று வருவதை அண்மைக் கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் பலரும் கூறியுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

★ யாழ். மாவட்டத்தில்

உணவுப்பற்றாக்குறை குறித்து அமைச்சின் செயலர் ஆராய்வார்

(நெல்லியடி)
"வட பகுதியில் நிலவும் உணவுப் பற்றாக்குறை சம்பந்தமாகவும், இதனால் மக்கள் படும் அவல நிலைகளையும் சேதமடைந்துள்ள இடங்களையும் நேரில் பார்த்து அதற்கான நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் உத்தியோக பூர்வமாக வடபகுதி விஜயத்தை மேற்கொண்டுள்ளேன்.

இவ்வாறு, நேற்றுக்காலை குமரன் கப்பலில் பருத்தித் துறைக்கு வந்துசேர்ந்த யாழ்மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், சூழல் பாதுகாப்பு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளருமான திரு தேவநேசன் நேசையா

(4-ம் பக்கம் பார்க்க

புலிகளைச் சந்திக்க பிரிட்டிஷ் எம்.பி.க்கள் தயார்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக யாழ்ப்பாணம் செல்வதற்கு தாங்கள் தயாரென பிரிட்டன் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு வந்துள்ள பிரிட்டனின் பிரதிச் சபாநாயகர் திரு. மைக்கேல் மொரிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் ற்கிக் ஆகியோரே, அவசியம் ஏற்படின் விடுதலைப் புலிகளுடன் பேச தாம் யாழ்ப்பாணம் செல்வதற்கு தயாரென கூறியுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகள் தாக்குதல் 2 ரெலோ பலி மூவர் படுகாயம்

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாண திருமலை வாழைச்சேனையில் உள்ள ரெலோ அமைப்பின் முகாம் மீது, நேற்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ரெலோவைச்சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும், மூவர் படுகாயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்து ரெலோ உறுப்பினர்கள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்திவருவதும் தெரிந்ததே. (க-கி)

புலிகள் வசமுள்ள பகுதிகளை மீட்கும்வரை ராணுவ தாக்குதல் கிழக்கு தளபதி கூறுகிறார்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் பெரும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கிழக்கு பிராந்திய இராணுவ தளபதி லக்கிஅக்கம கூறியுள்ளார்.

தற்போது புலிகள் வசம் உள்ள பகுதிகளை மீட்கவே

(4-ம் பக்கம் பார்க்க)

இராணுவ உத்தியில் இனிமேல் மாற்றம்

(கொழும்பு)
இராணுவத் தாக்குதல் உத்தியில் இனிமேல் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை காலமும் வடக்கு-கிழக்கில் படையினர், தாக்குதல் நடத்திய பின்னர் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளைக் கைவிட்டுப் பழைய

(4ம் பக்கம் பார்க்க)

கிழக்கில் ராணுவம் உஷார் நிலையில்!

(கொழும்பு)
கிழக்கில் பாதுகாப்பு படையினர் தற்போது பூரண உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

கிழக்கில் கடந்த வாரம் இடம்பெற்ற 'ஒபரேஷன் வடக்கு காற்று' இராணுவ நட

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கில்

ஹெலிகள் மூலம் துண்டுப்பிரசுரங்கள்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்தவரெனச் சந்தேகிக்கப்படும் தற்கொலையாளியான சாவகச்சேரியைச் சேர்ந்த 23 வயதான குலவீரசிங்கம் வீரக்குமார் தானா என்பதை அறியும் நோக்கில் இன்று முதல் வடக்கு-கிழக்கு பகுதியில் ஹெலிகொப்டர்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் போடப்படவுள்ளனவாம்.

இப்பிரசுரத்தில் தற்கொலைப் படையாளியின் புகைப்படமும் அவரின் தோற்றம் பற்றிய தகவலையும் கொண்டதாக அமையுமெனவும் கூறப்

4-ம் பக்கம் பார்க்க)

★ ஈழத் தமிழர் விவகாரம்:

டென்மார்க் அமைச்சரின் குற்றப் பிரேரணை நிறைவேறியது

(ஹொபன்ஹேன்)
இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் விடயத்தில் இடம்பெற்ற ஊழல் விவகாரம் ஒன்றுக்காக, டென்மார்க்கின் முன்னாள் நீதி அமைச்சர் எரிக் நிக்காந்தனுக்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்றில் கொண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

சிங்கப்பூரில் 80 இலங்கையர் ஏமாற்றப்பட்டு தவிப்பு!

(சிங்கப்பூர்)
சிங்கப்பூரில் நிர்க்கதியாக விடப்பட்ட நிலையில் என்பது இலங்கையர்கள் தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை ஏமாற்றி தவிக்க விட்ட மூன்று சட்டவிரோத வேலைவாய்ப்பு முகவர்கள் தற்போது பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுரேஷ் புத்தக களஞ்சியம், 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3185)

PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஏ-112)

O/L கணிதம்

Distinction பெறுபேறடைய மீட்டல். ஆரம்பத்திலிருந்து அண்டு 9, 10 உட்பட B. Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (கி-210)

Thanks
St. Jude
for
Favour Granted
(C-212)

பெயர் மாற்றம்

யாழ்நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர்
K.V. Kanesalingam
என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனபதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
K.V. Kanesalingam
298, காங்கேசனதுறைவீதி, யாழ்ப்பாணம்
(கி-187)

மரண சகாய நிதி

(நெல்லியடி)

புலோலி வணிகர் சங்கத்தின் மரண சகாய நிதியிலிருந்து ரூபா பத்தாயிரம் அண்மையில் மந்திரகையைச் சேர்ந்த திரு. இரத்தினசிங்கம் குடும்பத்தினருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. —160

கூட்டுப் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

சரசாலை நுணுவில், அருள்மிகு ஸ்ரீ சிதம்பரவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தில் தினமும் பஜனை கூட்டுப் பிரார்த்தனையும், சமயப்பெரியார்கள் சமயஉரை நிகழ்த்தி வருகின்றனர். (154)

ஆண்டுவிழா போட்டிகள்

(கொழும்புத்துறை)

அரியாலை சரஸ்வதி மத்திய நூல்நிலையம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 74-வது ஆண்டு நிறைவுவிழா பூலை மாதம் 16-ந் திகதி நடைபெறுவதனைமொட்டி கரப்பந்தாட்டம் (செட்டிப்), வலைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் (தனி) என்பன வடமராண்ணரீதியில் நடைபெறவுள்ளது. —154

போட்டிகள் நடாத்த ஏற்பாடு

(ஆனைப்பந்தி)

சர்வதேச கூட்டுறவு தினவிழாவையொட்டி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினதன் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களிடையே பேச்சு, கட்டுரை, வினாடிவினா, குழுப்பாடல், கிராமிய நடனம், நாடகம் ஆகியவற்றிற்கு போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் ஒவ்வொரு கோட்ட மட்டத்திலும் இம்மாதம் 19ம், 20ம், 26ம், 27ம் திகதிகளில் நடைபெறும். (101)

வீரவணக்க கூட்டம்

(அரியாலை)

மேமாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வடமராட்சிக்கோட்டத்தின் கரவெட்டி வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் அண்மையில் காரணவாய் கிழக்கு உச்சில் அம்மன் கோவிலடி மைதானத்தில் நடைபெற்றது. செல்வி சுகுணா திரு. தங்கன், திரு. கலை அரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். 59)

21,900 பனை விதைகள் பூநகரியில் நடுகை

(யாழ்ப்பாணம்)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1992ம் ஆண்டில் 21,900 பனை விதைகளை நடுகை செய்துள்ளது.

இத்திட்டம் யாழ்.மாவட்ட பனை அபிவிருத்திச் சபை, யாழ். மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவு ஆணையாளரின் பணிப்பின் பேரிலேயே இடம் பெற்றது எனத் தெரிவருகிறது. பூநகரி தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கமும் இத்திட்டத்துக்கு 5000 ரூபா நிதி உதவி அளித்துள்ளது.

1993ம் ஆண்டு 50,000 பனை விதைகளை நடுகை செய்வதற்கு பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் திட்டம் வகுத்துள்ளது. (ஈ)

கிராமிய தலைமைத்துவ பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், யாழ் பிராந்திய உவிளுராபிவிருத்தி நிறுவனமும் இணைந்து கிராமிய தலைமைத்துவ பயிற்சியொன்றினை நடாத்தவுள்ளது.

இம் மாவட்டத்திலிருக்கும் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் ஆளுமையினை அபிவிருத்தி செய்யும் நோக்கமாகவே இப்பயிற்சி நெறி நடாத்தப்படவிருக்கிறது.

ஆளுமையினை விருத்திசெய்தல், தலைமைத்துவம், சூழல் சுகாதாரம், தொடர்புகளை மூலவளப் பயன்பாடு, பெண்களை அபிவிருத்தி, போசாக்குணவு நோய்த்தடுப்பு போன்ற பல விடயங்களை இப் பயிற்சி உள்ளடக்கியதாக இருக்கும்.

சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் அனுபவம் வாய்ந்த அரச அதிகாரிகளாலும், விரிவுரையாளர்களினாலும், வைத்தியர்களினாலும் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் இப்பயிற்சியின் பின் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (160-கி)

பருத்தித்துறை — பிரதானவீதியில்
சாரையடி — புலோலி

V. E. C. கல்வி நிறுவனம்

அல்வாய், வியாபாரிமூலை, மந்திகை, புலோலி, துன்னாலை, தும்பளை, பருத்தித்துறை

மாணவர் நலன் கருதி

G. C. E. O/L

துரித, மீட்டல் வினாவிடை வகுப்புக்கள் ஆம்பமாகிவிட்டது

விஞ்ஞானம்	—	திரு. மகேந்திரன்
கணிதம்	—	திரு. சிவராஜா
சமூகக் கல்வி	—	திரு. முரளி
தமிழ்	—	திரு. அம்பலவாணர்
ஆங்கிலம்	—	திரு. வேலும்மயிலும்
வரித்தகம்	—	திரு. ஏரம்பநாதன்

வடமராட்சியில் முன்னணி ஆசிரியர்கள் ஒன்றிணைந்த சேவை

(கி-207)

புற்றுநோயை கட்டுப்படுத்தும் மருந்து உபகரணம் விரைவில் யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

மகரமை புற்றுநோய் வைத்தியசாலையிலிருந்து புற்றுநோயை கட்டுப்படுத்தும் சிகிச்சை அளிப்பதற்கான உபகரணங்கள் விரைவில் யாழ் மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு உபகரணங்கள் அனுப்பிவைக்கப்படும் பட்சத்தில், யாழ் மாவட்டத்திலிருந்து புற்றுநோயை குணப்படுத்த முதலாவது சிகிச்சைக்கு மட்டுமே மகரமை புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியிருக்கும். ஏனைய தொடர் சிகிச்சைகளை யாழ். மாவட்டத்திலேயே தொடரக்கூடிய சூழ்நிலை ஏற்படும் எனவும் தெரிவருகிறது.

தற்போது சப்பல்களில் செல்லும் நோயாளிகளில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் தொடர் சிகிச்சைகளுக்காக மகரமையிற்குச் செல்பவர்களின் எண்ணிக்கை பெரும்பங்கு ஆகிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (158)

பாவனைக்கு உதவாத பூடுகள் விநியோகம்

(திருநெல்வேலி)

யாழ். செயலகத்தினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பூடு (உள்ளி) பழுதடைந்துள்ளதாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரச அதிபரிடம் புகார் செய்துள்ளன.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு இப்பூடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இவை பொதுமக்களின் பாவனைக்கு உகந்ததாக இல்லாமல் பழுதடைந்து விட்டதாகவும் இவற்றை விற்பனை செய்ய முடியாதுள்ளதாகவும் அரச அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. —157

செஞ்சிலுவை சங்கம் நடத்திய இளைஞர் யுவதிகளுக்கான இரு விசேட பாசறைகள்

(நாவலடி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வடமராட்சி கிழக்குப் பிரிவின் உவிளை நாவலடி செயபுரம் பற்று, மணற்காடு குடாரப்பு ஆகிய கிராமங்களின் இளைஞர் யுவதிகளைக்கொண்ட இரு விசேட பாசறைகள் நாவலடி பங்குத்தந்தை அருட்திரு. ம. டேவிட் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்குப் பிரிவுத் தலைவர் கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார் பாசறைகளை கடமையாற்றினார். யாழ். கிளை செஞ்சிலுவைச் சங்க முதல் உதவி அதிகாரி பாசறை இயக்குநராகப் பணிபுரிந்தார்.

சுமார் 125 க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளின் தலைமைத்துவ அபிவிருத்தி ஆளுமை உளவியல் ஆகிய விடயங்களில் நவீன விளையாட்டுக்களுடனும் பாசறைக் கீதங்களுடனும் முதலுதவி, அவசர சிகிச்சை, காயப்பட்டோரை உடன் தூக்கிச் செல்லும் முறைகள், விபத்துகளுக்கு சிகிச்சைகளை போன்றவையும் செயன்முறைகள் மூலம் குழுக்களாகப் பயிற்றப்பட்டன. முடிவில் தீப்பாசறை நிகழ்ச்சி நடைபெற்றது. அனர்த்தங்களுக்கு அவசர முதலுதவி அளித்தல் போன்ற குட்டி நாடகங்கள் கிராமிய பாடல்கள் போன்ற பல நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (163-கி)



ரேஸ்ரியின் சுற்றும் போட்டியில் வெற்றிபெறுவதற்கான நிபந்தனைகள்:

பியர், ஜாம் அல்லது கோடியக் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் (அதற்குரிய அதிர்ஷ்டலாபச் சீட்டையும்) பெற்றுக் கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

போத்தல்கள் ஒப்படைக்க வேண்டிய இடங்கள்:

(1) ரேஸ்லன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட், 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
(2) அறிவகம் - சாவகச்சேரி (3) சுபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி
(4) சுந்தரம் அன் சன்ஸ் - சுன்னாகம் (5) கிருதிவினாயகர் நூல் நிலையம் - ஏழாலை மேற்கு. (6) சபாறிஸ் - கண்டுக்குளி (7) நீதினி Q - கன்னாகம்
(8) செ. சுரேஸ் - சோமசுந்தரப் புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
(9) ஸ்கந்தா மாஸ்ரர் - சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
(10) இ. இராசதுரை - பத்திரிகை விற்பனை நிலையம், இருபாலைச் சந்தி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(ஏ-3183)

பிரேமாவை கொல்ல சதி நடப்பது பற்றி முன்கூட்டியேஎச்சரிக்கைசெய்யப்பட்டது

(தொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்ய சதிநடப்பது பற்றி அவருக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டதாக இலங்கைப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரேமதாஸா கொலை தொடர்பாக புலன்விசாரணை நடத்திவரும் குற்றப்புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலான அமரசேன ராஜபக்ஷ பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரி தகவல்

ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொல்ல சதித்திட்டம் உருவாகுவது பற்றி அவர் கொல்லப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது. மார்ச் மாதம் 9-ம் திகதி சதிகாரர்களின் கொலைத் திட்டம் குறித்து ஒருவர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தார். இதனையடுத்து ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு இதுபற்றி தெரிவிக்கப்பட்டது.

பிரேமாவின் தனி உதவியாளர்கள், மெய்ப்பாதுகாப்பாளர்களைக் கருவியாகப் பயன்படுத்தி சதிகாரர்கள் தங்கள் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடுமென்று கருதப்பட்டதால் வெளியார் எவரும் ஊடுருவாமல் தடுக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி பாதுகாப்பு அதிகாரிகளும் எச்சரிக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (பி)

வெற்றிலை ஏற்றுமதி மூலம் 7 கோடி ரூபா வருமானம்

(கொழும்பு)

வெற்றிலை ஏற்றுமதி மூலம் இலங்கை 7 கோடி ரூபாவை வருடாந்தம் வருமானமாக சம்பாதிக்கின்றது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் வெற்றிலையை பாகிஸ்தானே பெருமளவில் கொள்வனவு செய்கின்றதாம்.

வெற்றிலை உற்பத்தியில் குருநாகல், கம்பகா ஆகிய மாவட்டங்களே தற்போது முன்னணி வகிக்கின்றன. (வ-பி)

சிரமதானம்

(தொழும்புத்துறை)

தொட்டலங்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் வீதியுலா வருவதை முன்னிட்டு தொட்டலம் மத்தி சர்வோதய நிலையத்தினர் இப்பகுதியில் உள்ள சில வீதிகளையும் சிரமதானப் பணி மூலம் செப்பனிட்டு உள்ளனர். —154

கலைவிழா

(தாளையடி)

தாளையடி ரோ. க. த. க. வித்தியாலய கலைவிழா நிகழ்ச்சிகள் அதிபர் திருமதி மாகிலாமணி ஸ்றனிஸ்லோஸ் தலைமையில் அண்மையில் வித்தியாலய கலை அரங்கில் நடைபெற்றது.

கலைவிழாவுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் கலந்து கொண்டார். 163

அங்கோலாவில் 10 குழந்தைகள் உட்பட ஐம்பது பேர் கொலை

(லூவாண்டா)

அங்கோலாவில் புனிட்டா போராளிகள் நேற்று முன்தினம் தனித்தனியாக நடத்திய இரு தாக்குதல்களில் பத்து குழந்தைகள் உட்பட 50 பேர் கொல்லப்பட்டார்கள்.

அங்கோலாவின் நகரப் பகுதி ஒன்றில் நடைபெற்ற தாக்குதலொன்றில் பத்து குழந்தைகள் உட்பட 25 பேர் இறந்து விட்டனரென்றும் மற்றொரு தாக்குதலில் 25 பேர் இறந்துவிட்டார்கள் என்றும் அங்கோலா அரசு வானொலி தெரிவித்தது. (பி)

சந்நிதிக்கு பஸ்சேவை

(புலோலி)

நெல்லியடியிலிருந்து தொண்டமானாறு செல்வச் சந்நிதிக்கு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மினிபஸ் சேவை நடத்தப்பட்டுவருகிறது.

சந்நிதிக்குச் செல்லும்பக்தர்களின் வசதி கருதி ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமானது. (61)

"சேவை உள்ளம் கொண்டவரை உருவாக்கவேண்டும்"

(தொழும்புத்துறை)

"செஞ்சிலுவைச் சங்கமூலம் சேவை உள்ளம் கொண்ட மக்களையும், தொண்டர்களையும் உருவாக்க முன்வரவேண்டும்"

இவ்வாறு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய டாக்டர் த. சிங்கராசா தெரிவித்தார்.

சங்கச் செயலாளர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம், பொருளாளர் வே. தியாகராசா உட்பட பல பிரிவுப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். இக்கூட்டத்தில் சங்கத் தொண்டர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (154)

'குமண' வருகிறது

(யாழ்ப்பாணம்)

அடுத்த வாரமளவில் பருத்தித்துறையை வந்தடைவதிருக்கும் குமண கப்பலில் யாழ். மாவட்டத்திற்கான உணவுப் பொருட்களுடன் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திலு ஒருதொகுதி பொருட்களும், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு ஒருதொகுதி பொருட்களும் தபால் பொதிகளும் எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (158-பி)

சுகாதார பணிப்பாளரினால் மந்திகை வைத்தியசாலைக்கு மருந்து அனுப்பி வைப்பு

(நெல்லியடி)

மந்திகை வைத்தியசாலைக்கு 2 மாத காலத்திற்குப் போதுமான மருந்துவகைகளை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார்.

மந்திகை வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளின் அவலம் தீர்க்கும் வகையில் மருந்துகள் எதுவும் இல்லாதிருந்தது. இதனால் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரினால் நாவாந்தித் ஏற்படும் சேலைன் சத்திர சிகிச்சைக் குரிய பின்னறைத் துணிகள், கிருமி கொல்லி மருந்துகள், உயிர்ச்சத்து மருந்துகள், கர்ப்பிணித் தாய்மாருக்கான சுண்ணாம்புச்சத்து மருந்துகள், மன நோயாளருக்குரிய குளிகைவகைகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (160-பி)

சம்பள சிபார்சுகளை கடைப்பிடிக்க தீர்மானம்

(கொழும்பு)

உதவி அல்லது பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளங்களையும், ஓய்வூதியமற்றபடிகளையும் மீளாய்வு செய்து சம்பள ஆணைக்குழு செய்துவிட்ட சிபார்சுகளை கடைப்பிடிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது

மீளாய்வு செய்யப்பட்ட சம்பளங்கள் 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதோடு 1992 க் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் சம்பள நிலுவைகளும் வழங்கப்படவுள்ளன. ஓய்வூதியமற்றபடி 1992 ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதோடு அத்திகதியில் இருந்து நிலுவைகள் வழங்கப்படும். (சு)

கிளிநொச்சி ரெட்றிக்கோ மைதானம் புனரமைக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ரெட்றிக்கோ மைதானத்தை மிகவும் பிரமாண்டமான ஸ்ரேடியமாக அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைப்பு வேலைகளை கவனிக்கவென திரு. பொன். சிவநாதமூர்த்தியை தலைவராகவும், திரு. யூடியை செயலாளராகவும், திரு. குணரெத்தினத்தை பொருளாளராகவும் கொண்ட அமைப்புக் குழுவொன்றும் தெரிவாகியுள்ளது.

விடுதலைப் புலிகள் வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மனோ, கிளிநொச்சி கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இலக்கியன், கல்விப் பணிப்பாளர் திரு. செழியன், கிளிநொச்சி மேற்கு பிரதேசப் பொறுப்பாளர் திரு. சஞ்சீவி ஆகியோரும் ரெட்றிக்கோ மைதான அபிவிருத்தி வேலைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். (83)

இராசி பலன்

14-06-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு வைகாசி 32)

தசமி பி. இ. 4-50 வரை, ரேவதி, பி. இ. 4-47 வரை, சித்தயோகம் இராகுகாலம் காலை 7-23 முதல் 8-53 வரை. சுபநேரம் காலை 11-53 முதல் 1-23 வரை.

மேடம்: அதிகாரிகள் துயர், மனச்சோர்வு, மறதி.

இடபம்: எதிர்பாராத நன்மை, மனைவி பெருமை, பாராட்டு.

மிதுனம்: காரிய சித்தி, தொழில் உறவு, வெகுமதி.

கடகம்: அசுபச் செய்தி, பயணத் தடை, இடையூறு

சிங்கம்: வீண் அலைச்சல், சங்கடம், மனவெறுப்பு.

கன்னி: குரு உபதேசம், நண்பர் ஆதரவு, கடன் வசூல்.

துலாம்- தாய் கண்டிப்பு, தொழில் மந்தம், அகால உணவு

விருச்சிகம்: மனப்பயம், தனிமைப்படல், மனக்கவலை.

தனுசு: வாக்குவாதம், குடும்ப பிரிவு, பிறர் வெறுப்பு

மகரம்: எதிர்வாதம், நண்பர் உதவி, பொதுப்பணி.

கும்பம்: தொழில்மாற்றம், அருவருப்பு, கண் உபாதை.

மீனம்: கடமைப் பொறுப்பு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி பலிதம்.

— ஜோன்சர்

வடக்கு—கிழக்கு பகுதிகளில் மீளக் குடியேறுவோருக்கு கடன் வழங்க நடவடிக்கை

(உடுவில்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படுபவர்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

மீளக்குடியமர்வோர் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக இக்கடன் வழங்கப்படும். விவசாயம், பாற்பண்ணை, கடற்றொழில் மற்றும் இவற்றுக்கான இயந்திர சாதன உற்பத்தி போன்ற முயற்சிகளை மேற்கொள்ள இவ்வுதவி பயன்படும்.

ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் சுமார் நாநூறு பேருக்கு இவ்வாறு உதவிகள் வழங்கப்படுவதாகவும் விவசாய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கிராமிய வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவையூடாக இக்கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (109-பி)

வீரப்பன் விவகாரம்: கர்நாடக காடுகளில் மட்டுமே தேடுதல்

(சென்னை)

சந்தன மரக்கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்கு கர்நாடகக் காடுகளில் மட்டுமே எமது தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். தமிழ்நாடு காடுகளில் நாம் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டோம் என்று இந்திய எல்லைக்காவல் படைத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கர்நாடக அரசின் அழைப்பின் பேரிலேயே நாம் வீரப்பனைப் பிடிப்பதற்கு வந்துள்ளோம். தமிழ்நாடு காடுகளில் தேடுதல் நடாத்துவதற்கு எமக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (வி)

கரைநகர் மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கரைநகர் வாரிவளவு நலன்புரிச் சபை நடத்தும் மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் எதிர்வரும் 15ம் திகதி வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ரன் கல்லூரியில் அதிபர் ந. பரமசிவம் தலைமையிலும், 16ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள கலாநிதி (ஆ. திருநாகராசன் ம.ம வியில் அதிபர் அ. கமலாகரன் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. கனகசுந்தரமும், ஆ. அருளானந்தமும் கிறப்பு விருந்தினராக பேராசிரியர் வே. தர்மரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர்

மேற்படிப் பல்கலைக்கழக பொறியியல் முதலாண்டு பரீட்சையில் (1993) இரண்டாம் இடத்தைப் பெற்ற கனகரத்தினம் சதானந்தனுக்கும் ஐந்தாம் ஆண்டு 1991 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் இந்நிகழ்ச்சிகளில் பரிசில்கள் வழங்கப்படும். (கி-பி

★ ஆர்ப்பாட்டக்காரர் மீது

ஐ.நா.அமைதிபடையினர் சூடு 22 சோமாலியர்கள் பலி!

(மொகடிசு)

சோமாலியத் தலைநகர் மொகடிசுவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஐ. நா. அமைதிப் படையைச் சேர்ந்த பாகிஸ்தான் படையினர் மேற்கொண்ட சுடும் துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 சோமாலியர்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

சோமாலியத் தீவிரவாதக் குழுத் தலைவர்களில் ஒருவரான மொகமது ஹபாஹெதியின் வசமுள்ள நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாம்.

இதனைத்தொடர்ந்து பாகிஸ்தானியப் படையினர், ஹோட்டல் ஒன்றின் மேற்பகுதியிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்த சோமாலியர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த வாரம் சோமாலியத் தீவிரவாதிகள் ஐ.நா. அமைதிப் படையினர் மீது நடத்திய தாக்குதலில், 28 பாகிஸ்தானியப் படையினர் கொல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-கி)

லலித் கொலை:

மேலும்ஒன்பதுபேர் கொழும்பில் கைது

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக மேலும் ஒன்பது பேர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

லலித் கொலை தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களிடமான விசாரணையை அடுத்தே மேற்படி 9 பேரும் கைது செய்யப்பட்டனராம்.

லலித் கொலை குறித்து தொடர்ந்தும் தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தனர். (கி)

★ கோஷ்டி மோதல்

'சூலத்தினால்' தாக்குதல்; இளைஞர் மண்டை பிளந்தது

(நெல்லியடி)

"பூட்டப்பட்டிருந்த கல்விறபனை நிலையத்தை உடைப்பதற்கு முயன்றவர்களை, தடுத்த சிலர் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்துள்ளனர். இச்சண்டையின்போது ஆலயத்தில் அமைந்திருந்த வயிரவர் சூலத்தினால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் மண்டை பிளந்தது".

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை சுமார் 2-00 மணியளவில், புலோலி கிழக்கு உத்திராவத்தை என்னும் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;

மது அருந்திய நிலையில், மேற்படி கல்விறபனை நிலையத்திற்கு வந்த இளைஞர்கள், பூட்டப்பட்டிருந்த நிலையத்தை உடைக்க முற்பட்டனர். இதனை உடைக்க வேண்டாமென்று அங்குள்ள சிலர் புத்திமதி கூற, ஆத்திரமடைந்த இளைஞர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற இச்சண்டையின்போது, கற்கள், சங்கிலி செயின் முதலியன வற்றுடன் அருகிலுள்ள ஆலயத்தில் பதிக்கப்பட்டிருந்த "சூலம்" ஒன்றும் பிடுங்கி எடுக்கப்பட்டு, சண்டைக்குப் பாவித்துள்ளனர். இதனால் புலோலி கிழக்கு சந்தா தோட்டம் என்னுமிடத்தைச் சேர்ந்த சித்திரவடிவேல்—உதயசுதன் வயது 18 என்னும் இளைஞர் மண்டைபிளந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மேலும் சங்கிலி செயின் தாக்குதலுக்கிலக்கான பெண் ஒருவர் உட்பட பலர் படுகாயமடைந்துள்ளனர். (160-கி)

கிழக்கில் ராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையில் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் புலிகள் திடீர் தாக்குதல்களை நடாத்தலாம் என்ற காரணத்தாலேயே படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனராம்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியிலிருந்து பெருமளவு புலிகள் வடபகுதிக்குசென்றுவிட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறின. (கி)

இராணுவ உத்தியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களுக்குத் திரும்பியதாகவும், இனிமேல் அவ்வாறில்லாமல் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் படையினரை நிலைகொள்ளச்செய்து, அடுத்த இடத்தைக் கைப்பற்ற முயலுவர் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான தாக்குதல் உத்திகளு இனிமேல் பெருமளவு படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கி)

வயிற்றேட்டம் சிறுவர் பாதிப்பு

(நெல்லியடி)

கடந்த வெள்ளி, சனி ஆகிய இருநாட்களிலும், வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்பது சிறுவர்கள் மத்திகை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (160-கி)

சிங்களக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட 38 பொலிசார் மற்றும் 1991ம் ஆண்டு இடம்பெற்ற ஆனையிறவு யுத்தத்தில் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாயுமே சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டத்தில் குதித்தவர்களாவர்.

இதற்கிடையில் மேற்படி யுத்தக்கைதிகளைப் பார்வையிடுவதற்காக இவர்களின் உறவினர்கள் 78 பேரடங்கிய சிங்களப் பொதுமக்கள் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post ojjice, Sri Lanka under Licence Number B/10336/B

புலிகள் தலைவருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கதிரை அணுகி, இது சம்பந்தமாகப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு கடிதம் எழுதி, அவரிடம் ஒப்படைக்குமாறு வேண்டினேன் அவர்களும் மறுத்துவிட்டனர்.

இப்பொழுது பி. பி. ஸி. சந்தேகியாவுக்கு கடிதம் எழுதுகின்றேன். இந்தக் கடிதத்தை லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு அந்த உறவினர் உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் என்று பி. பி. ஸி சந்தேகிய தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது. (வ-கி)

புலிகள் வசமுள்ள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிலரில் திட்டமிடப்பட்ட பெரும் படை நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் மட்டக்களப்பு பகுதியில் விமானப் படை, கடற்படை உதவியுடன் சுமார் 3000 படையினர் தாக்குதல் நடாத்தியிருந்தனர் இப்படையினர் தமது தாக்குதலை மேலும் விஸ்தரிப்பார்கள் எனவும் கூறியலக்கி அக்கம், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை மீட்கும் வரை படை நடவடிக்கை தொடரும் எனவும் கூறினர். (கி)

ஈழத் தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட "குறைப் பிரேரணை" நிறைவேற்றப்பட்டுள்ளது.

டென்மார்க்கில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளிடம், அவர்களது குடும்பத்தவர்கள் இலங்கையிலிருந்து வந்த இணைந்துகொள்வதை நிறுத்துமாறு 1987ல் உத்தரவிட்டிருந்ததே அவர் மீதான குற்றச்சாட்டாகும்.

இவ்விவகாரம் தொடர்பாகவே, கடந்த ஜனவரியில் டென்மார்க்கில் பிரதமராக இருந்த திரு. போல் சலூட்டர் ராஜினாமா செய்யும் நிலை ஏற்பட்டதும் தெரிந்ததே. (கி)

யாழ். மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; பருத்தித்துறை இறங்கு துறையில் உள்ள இழுவைப் படகுகள் மீன்மோசமாக சேதமுற்றிருப்பதை நேரில் கண்டுள்ளேன். இது குறித்து கொழும்பு திரும்பியதும் நடவடிக்கை எடுப்பேன்.

வடபகுதியில், சொக்கொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களின் உணவுப் பொருள் தட்டுப்பாட்டையும் சேதமுற்றிருக்கும் இடங்களையும்நேரில்பார்த்தும் இவை குறித்து வாழ் அரச அதிபருடன் நேரடியாக சந்தித்தும் அதற்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளேன் கொழும்புத் துறைமுகத்திலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு உணவுப்பொருட்களை அனுப்புவதற்கே தனக்கு அதிகாரம் உண்டென்றும் கூறினார். (160 - கி)

பிரிட்டன் சிறையில் எட்டு இலங்கையர்

(கொழும்பு)

பிரிட்டனிலுள்ளசிறைகளில் இலங்கைத்தமிழர், சிங்களவர் எட்டுப்பேர் உட்பட 700க்கும் மேற்பட்டவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் மிகவும்கஷ்டமான நிலையிலுள்ளனர் என்றும்கூறப்படுகிறது. இவர்கள் ஈரான், ஈராக், பொஸ்னியா, உகண்டா, கொலம்பியா உட்பட இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களென்றும் கூறப்படுகின்றது. (வ-கி)

மருந்தால் கலப்படம் ஆயிரக்கணக்கான குழந்தைகள் மரணம்

(டாக்கா)

கலப்படம் செய்யப்பெற்ற 'பரசித்தமோல்' மருந்தை உட்கொண்ட ஆயிரக்கணக்கான குழந்தைகள் மற்றும் சிறுவர்கள்பங்களாதேஷில்உயிரிழந்துள்ளனர்.

இதனைஅடுத்து பங்களாதேஷ் மருந்துவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் இம் மருந்து விற்பனையை முற்றாக தடை செய்யவேண்டும் எனக்கோரி பங்களாதேஷ் அரசுக்கு எதிராக வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இன்று பங்களாதேஷ் உயர் நீதிமன்றில் ஆரம்பமாகும் இவ்வழக்கு விசாரணை பங்களாதேஷில் ஓர் சர்ச்சையை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது. (வ-கி)

மருத்துவமனை மீது சேர்பியபடை தாக்கு ஐம்பது பேர் பலி

(சரயுபு)

பொஸ்னியாவில் மருத்துவமனை ஒன்று சேர்பிய துருப்புக்களால் தாக்கப்பட்டதில் 50 பேர் கொல்லப்பட்டதாக வானொலி செய்திகள் தெரிவித்துள்ளன.

முஸ்லீம்களின் பாதுகாப்புப்பிரதேசமான பொராஸ்டே நகர் நோக்கி சேர்பியப்படைகள் முன்னேறுவதாகவும் குறிப்பிட்ட அப்பகுதி சகல முனைகளிலும் தாக்கப்பட்டு வருவதாகவும் யுத்த முனைகளில் ஆங்காங்கு இருதரப்பினரிடையேயும் கைகலப்பு சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்துள்ளது. (வ - கி)

கிளாலி கடலில் பீரங்கித் தாக்கு

(எழுதுமட்டுவாள்)

நேற்று முன்தினம் இரவு கிளாலி கடற்பரப்பிலிருந்து கடற் படையினர் பீரங்கி தாக்குதலையும், 50 கலிபர் தாக்குதலையும் நடத்தினர்.

இதேவேளை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளாலி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. (170)

வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

இவர் பற்றி ஊர்ஜிதம் செய்யக் கூடிய தகவல்களைத் தெரிவிப்போருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இத்தகவல்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் அகதி முகாம்களிலும் விநியோகிக்கப்படவுமுள்ளதாம். (கி)

புலிகளைச் சந்திக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு உதவி வழங்க ஆராய்வதற்கென கொழும்பு வந்துள்ள இவர்கள் இருவரும் ஸ்ரீலங்கா அரசு புரியும் மனித உரிமை மீறல்கள், பொருளாதார நிலைகள் குறித்துப் ஆராய்ந்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் அறிவதற்காகவே தேவை ஏற்படின் யாழ்ப்பாணம் வரத் தயாரென்று இவர்கள் கூறி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு-கி)

சிங்கப்பூரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இரகசிய பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது.

இந்த மூன்று வேலை வாய்ப்பு முகவர்களினதும் புகைப்படங்களும், கடவுச்சீட்டு இலக்கங்களும் சிங்கப்பூரிலுள்ள இலங்கை ஸ்தானிகராலயத்தால் இரகசிய பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியிருக்கொண்டிருப்போரை இலங்கைக்கு திருப்பியழைக்குமாறும் இவர்களிடம் பெற்ற பணத்தை திருப்பிக் கொடுக்குமாறும் அந்த மூன்று முகவர்களும் கோரப்படவுள்ளனர். (கி)

இனப் பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை, சமாதான தீர்வு எனக் கூறிவந்த அரசு திடீரென நாட்டைக்காக்க அனைத்து சிங்கள இளைஞர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்க தீர்மானித்திருப்பதும், கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த தெரிவுக்குழு சிபார்சு செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டதும் கிழக்கில் பரவிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதும், இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளை ஒடுக்கிட முடியுமா என இராணுவ தளபதியிடம் ஜனாதிபதி ஆலோசித்திருப்பதும் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு ஆலோசகர் என்ற பெயரில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சேபால ஆட்டிகல மீண்டும் யுத்த முனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதும், இராணுவ தலைமைபீடத்தில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் மற்றும் பல நடவடிக்கைகளும் அரசின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை காட்டுவதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சர்வஜனவாக்கெடுப்பின் பின்பே இனப்பிரச்னைக்கான தீர்வொன்றை தெரிவுக்குழு சிபார்சு செய்யுமெனக் கூறியிருப்பதும் அரசு எந்தத் தீர்வை நாட விரும்புகிறது என்பதைக் காட்டுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (கி)